DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 238/2024** |
| Deposition of Witness for | : PW 4 |
| Name | : சுப்புலட்சுமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 01.08.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 01st **August2025.**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். அ.சா.1 எனது தம்பி. 12 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நானும், எனது கணவரும் மும்பையில் உள்ள எனது மகன் வீட்டிற்கு சென்றுவிட்டோம். மும்பைக்கு சென்ற 2 நாட்களில் எனது பக்கத்து வீட்டை சார்ந்தவர்கள் வீட்டில் திருடுபோய்விட்டதாக தகவல் சொன்னார்கள். நான் எனது தம்பி ராஜேஸ்கண்ணாவை அனுப்பி பார்க்க சொன்னேன். அவர் எனது வீட்டில் வந்து பார்த்துவிட்டு 2 குத்துவிளக்கு காணாமல் போனதாக தகவல் சொன்னார். என் தம்பி மூலமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம். என்னிடம் காட்டப்படும் குத்துவிளக்கு 2 எண்ணம் காணமல் போன எங்களது குத்துவிளக்கு தான். 2.140 கி.கிராம் எடை கொண்ட பித்தளை குத்துவிளக்கு

சா.பொ.1 ஆகவும், 1.520 கி.கிராம் எடை கொண்ட பித்தளை குத்துவிளக்கு சா.பொ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகின்றன. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவம் நடந்த சமயத்தில் நான் மும்பையில் இருந்தேன் என்றால் சரிதான். நான் முப்பையிலிருந்து ஊருக்கு திரும்பிய பிறகுதான் சம்பவம் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. மும்பையில் இருக்கும் போதே எனது வீட்டிற்கு அருகில் உள்ளவர்கள் சம்பவம் பற்றி எனக்கு தகவல் தெரிவித்தனர். எனக்கு சம்பவம் பற்றி தகவல் அளித்த நபரின் பெயர்தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. புகார்தாரர் ராஜேஸ்கண்ணன் எனது உடன் பிறந்த தம்பி என்றால் சரிதான். எனது தம்பி அளித்த புகார் மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சா.பொ.1 மற்றும் சா.பொ.2 எந்த கடையில் நான் வாங்கினேன் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சா.பொ.1 மற்றும் சா.பொ.2 குத்துவிளக்குகளில் 4 முகங்கள் உள்ளன என்றால் எனக்கு நியாபகம் இல்லை. அ.சா.1 எனது தம்பி என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றாலும், சரியல்ல.

ம.வி.இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | | |
|---|---|---|
| Calendar | | --- |
| Miscellaneous | | --- |
| Preliminary Register | : | **CC 238/2024** |
| Deposition of Witness for | : | PW 5 |
| Name | : | மாரியப்பன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |
| Date | : | 01.08.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 01st **August2025.**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் DEO ஆக இருந்து பணி ஓய்வு பெற்றுவிட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதல்ல. வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

கடந்த 11.11.2012 9.30 மணிக்கு எழில்நகரில் வைத்து போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள்

என்றால் சரியல்ல. அதில் நானும், ராஜகுரு என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது அதற்காக மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 238/2024** |
| Deposition of Witness for | : PW 6 |
| Name | : ராஜகுரு |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 01.08.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 01st **August2025.**

**எதிரி ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். நான் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து தற்போது பணி ஓய்வு பெற்றுவிட்டேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதல்ல. வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி அரசுதரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியமாக பாவித்துக்கொள்ள அரசுதரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரியதன்படி அனுமதி வழங்கப்பட்டது. )**

**அரசுதரப்பில் குறுக்குவிசாரணை**

கடந்த 11.11.2012 9.30 மணிக்கு எழில்நகரில் வைத்து போலீசார் சம்பவ

இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதில் நானும், மாரியப்பன் என்பவரும் கையெழுத்து செய்ததாக போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது அதற்காக மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.**